Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 22

வியாழக்கிழமை
18 டிசெம்பர் 2025

மார்கழி 03ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## வடக்கில் இன்றுமுதல் மழை குறையும்!

யாழ்ப்பாணம், டிசெ. 18
வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக நிலவிவரும் மழையுடனான காலநிலை, இன்றுமுதல் குறைவடையும் என்று, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரி

»15

# எந்தவொரு கட்டுமானங்களும் பழையபூங்காவில் வேண்டாம்!

### யாழ். மாநகரசபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 18**

**யாழ்ப்பாணம் பழையபூங்கா பகுதியில், எவ்வித கட்டுமானங்களும் அமைக்கக்கூடாது என்று வலியுறுத்தி யாழ்ப்பாணம்மாநகரசபையில்நேற்றுத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.**

»15

*500 பில்லியன் ரூபா*

## நாடாளுமன்றில் இன்று குறைநிரப்பு விவாதம்!

கொழும்பு, டிசெ. 18
டித்வா புயல் மீட்பு நடவடிக்கைகளுக்காகவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவும் குறை நிரப்புப் பிரேரணை ஊடாக ஒப்புதல் வழங்குவதற்காக நாடாளுமன்றம் இன்று கூடவுள்ளது.
இடர் முகாமைத்துவ நடவடிக்

»15

### கிராம உத்தியோகத்தர் தாக்கப்பட்ட விவகாரம்

## பொலிஸில் வாக்குமூலம் வழங்குக; இளங்குமரன் எம்.பி.க்கு உத்தரவு!



யாழ்ப்பாணம், டிசெ. 18
டித்வா புயலின்போது, பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில், தங்கியுள்ள பொதுமக்களுக்கு இடர்கால உதவிப் பொருள்களை வழங்கும்போது,

»15

### இலங்கையுடன் எப்பொழுதும் துணைநிற்போம்

*சீனா அறிவிப்பு*

கொழும்பு, டிசெ. 18
பிராந்திய மற்றும் சர்வதேசவிவகாரங்களின் போது, சீனாவுடன் இலங்கை என்றும் துணை நிற்கும் என சீன அரசின் உயர்மட்ட அதிகாரி வாங்

»15

டித்வா பேரிடரைக் கருத்திற்கொண்டு

## கட்டணக் கழிவகற்றலில் யாழ்.மாநகரசபை சலுகை

### டிசெம்பர் இறுதிவரை தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 18
யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில், கட்டணக் கழிவகற்றல் முறையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக மேயர் மதிவதனி அறிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
டித்வா புயலின் தாக்கத்தால் நகரின் பல்வேறு பகுதிகளிலும் கழிவுகள் தேங்கியுள்ளன. எனவே, மனிதாபிமான நடவடிக்கையாக, டிசெம்பர் மாதம் இறுதிவரை கட்டணம் பெறா

»15

*மண்டைதீவுப் புதைகுழி*

## மார்ச் 31ஆம் திகதி மீளவும் விசாரணை!

யாழ்ப்பாணம், டிசெ. 18
மண்டைதீவுப் புதைகுழி வழக்கு மார்ச் மாதம் 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று தவணையிடப்பட்டுள்ளது.
மண்டைதீவுப் புதைகுழி வழக்குத் தொடர்பான அறிக்கை, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்

»15

**டில்லிக்கு செல்கிறார் நளிந்த**
விரிவு பக்கம்:-02

# சுமணரத்ன தேரர் நீதிமன்றில் சரண்



கொழும்பு, டிசெ. 18
தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்தை வெளியிட்டமை தொடர்பில், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அம்பிட்டிய சுமணரத்ன தேரர் நீதிமன்றத்தில் நேற்றுச் சரணடைந்தார்.
2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதியில், அம்பிட்டிய சுமணரத்ன தேரர் ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கி

»15

**நாடெங்கும் உச்சப் பாதுகாப்பில் வழிபாட்டுத்தலங்கள்**
விரிவு பக்கம்:-02

**தமிழுமில்ல வரலாறு சிதைக்கப்படக்கூடாது**
விரிவு பக்கம்:-02

# எமது உதவித்திட்டங்களில் பெயரெடுக்க அரசு முயற்சி



### ஊழல், ஏமாற்று வேலைகளுக்கும் அவர்களே காரணம் வலி. தென்மேற்கு சபையில் அனல் பறந்தது விவாதம்

யாழ்ப்பாணம், டிசெ. 18
நாங்கள் மக்களைச் சென்று சந்தித்து, மக்களுடன் மக்களாக நின்று உதவித் திட்டங்களை வழங்கினால், மறுநாள் தேசிய மக்கள் சக்தியினர் சென்று 'எல்லாம் எல்லாருக்கும் கிடைத்ததா?' என்று பெயரெடுக்க முனைகின்றனர் இவ்வாறு வலி. தென்மேற்கு பிரதேசசபையில் நேற்றுக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

»15

மூச்சந்தி முரளி

'நிவாரணம் குடுக்கிறது ஆரோ , பேர் எடுக்கிறதோ ஆரோ என்டது நல்ல பழக்கமில்லை கண்டியளோ'



*12 மேலதிக வாக்குகளால்*

## வேலணைப் பிரதேசசபையின் பட்ஜெட் நேற்று நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 18
வேலணைப்பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், 12 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
வேலணைப்பிரதேசசபையின் அமர்வு, தவிசாளர் சிவலிங்கம்

»15

காங்கேசன்துறையில்

## உணவுத் திருவிழா!

யாழ்ப்பாணம், டிசெ. 18
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் ஏற்பாட்டில், காங்கேசன்துறைக் கடற்கரையில்சுற்றுலாவிகளைக் கவரும் விதமாக உணவுத் திருவிழா நடைபெறவுள்ளது.
வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோம

»15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 17.12.2025 | திகதி 17.12.2025 | திகதி 17.12.2025 | திகதி 17.12.2025 | திகதி 17.12.2025 | திகதி 17.12.2025 | திகதி 17.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4288 | சீட்டிழுப்பு இலக்கம் 1355 | சீட்டிழுப்பு இலக்கம் 0314 | சீட்டிழுப்பு இலக்கம் 2394 | சீட்டிழுப்பு இலக்கம் 6046 | சீட்டிழுப்பு இலக்கம் 2076 | சீட்டிழுப்பு இலக்கம் 0162 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் தனு | ஆங்கில எழுத்து V | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கினம் தனு |
| | | | சுப்பர் இலக்கம் 04 | | | |
| வெற்றி இலக்கங்கள் 27 55 59 70 | வெற்றி இலக்கங்கள் 30 35 43 48 | வெற்றி இலக்கங்கள் 1 7 5 1 | வெற்றி இலக்கங்கள் 40 44 45 69 | வெற்றி இலக்கங்கள் 8 8 6 2 2 3 | வெற்றி இலக்கங்கள் 26 42 65 80 | வெற்றி இலக்கங்கள் 06 27 56 |
| விசேட எழுத்து H | | | | | விசேட எழுத்து O | |

# துயிலுமில்லங்களின் வரலாறு சிதைக்கப்படுவதைத் தடுப்போம்!

### மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

**மாவீரர் துயிலுமில்லம் என்ற ஒரு மகத்தான அடைமொழிக்கு உள்ளே ஓர் இனத்தின் விடுதலை வரலாறு உறைந்து கிடக்கின்றது. இந்த மகத்தான வரலாறுகள் சிதைக்கப்படுவது தடுக்கப்படவேண்டும்- இவ்வாறு மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்து வந்த 76 வருட காலமாக தமிழினம் தொடர்ச்சியாக தமது மிதவாத அரசியல் பிரதிநிதிகளால் ஏமாற்றப்பட்டு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகிறார்கள்.

இதன் விளைவே 70 களில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிர்க்கதிக்குள் தள்ளப்பட்டதற்கான ஒரு காரணமாகும். தாயக விடுதலைக்காக களமாடி விதையாகி வீழ்ந்த வீரர்களே மாவீரர்கள். இத்தகைய வீரர்கள் தனித்துவமாக உரிய கௌரவத்துடன் மதிக்கப்படவேண்டும்.

மாவீரர் துயிலுமில்லம் என்ற ஒரு மகத்தான அடைமொழிக்கு உள்ளே ஒரு இனத்தின் விடுதலை வரலாறு உறைந்து கிடக்கின்றது. ஒரு தேசிய இனத்தின் விடுதலைக் கனவை மாவீரர் துயிலுமில்லம் என்ற மகத்தான அடைமொழி சுமந்து நிற்கின்றது. இத்தகைய வீரர்கள் உறங்குகின்ற மாவீரர் துயிலுமில்லத்தை சுயநலமிகள் குறுகிய தங்களின் அரசியல் தேவைகளுக்காக தாவரவியல் பூங்காவாக பெயர் மாற்றம்செய்து வரலாற்றைச் சிதைக்கின்றனர்.

மகத்தான வரலாறுகள் சிதைக்கப்பட்டு எம் எதிர்காலச் சந்ததிகளுக்கு உண்மைக்குப் புறம்பான சிதைக்கப்பட்ட வரலாறுகளே சென்றடையும். மாவீரர் துயிலுமில்லம் என்றால் அரசியல் வாக்கு வேட்டைக் களமாகவே எமது எதிர்காலச் சந்ததிகள் புரிந்துகொள்வார்கள்.

தாவரவியல் பூங்கா என்றால் களியாட்ட விழா நடக்கும் ஒரு இடமாகவே வரலாற்றைச் சிதைத்து இருட்டடிப்புச் செய்வார்கள். எனவே இந்த பேரபாயத்தில் இருந்து மாவீரர் துயிலுமில்லங்களைக் காப்பாற்றுவதற்கு மக்களாகிய நீங்கள் விழிப்படைந்து கொள்ளவேண்டும்.

எனவே மாவீரர் துயிலுமில்லங்கள் வேறு எந்தப் பதிவுகளுக்கோ, பெயர் மாற்றங்களுக்கோ உட்படுத்தப்படாமல் தொடர்ந்தும் மாவீரர் துயிலுமில்லங்களாக இருப்பதை உறுதிசெய்யவேண்டும். மாவீரர் துயிலுமில்லங்களில் குறுகிய தமது நலன்களுக்காக அரசியல் கட்சிகள் ஆதிக்கம் செலுத்துவதை ஒழித்து தாயகதேசத்தில் பரந்து வாழும் மக்களும், கட்டமைப்புகளும் ஒருசேர ஒற்றுமையுடன் நிர்வகிப்பது கட்டாயமாக்கப்படவேண்டும் . - என்றுள்ளது. (ச)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | வெற்றி வாரம் 0754 |
| ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கம் 9 4 7 0 7 7 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 3020 | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 04 13 40 62 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கம் 05 48 70 72 | வெற்றி வாரம் 5181 |

| SASIRI DLB | | |
|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | |
| வெற்றி வாரம் 0850 | வெற்றி இலக்கம் 18 30 43 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் 48 56 57 59 | சீட்டிழுப்பு வாரம் 4732 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து W | சுப்பர் இலக்கம் 26 | வெற்றி இலக்கம் 03 35 41 70 | வெற்றி வாரம் 2196 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 17.12.2025 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 25 34 38 76 | வெற்றி வாரம் 2846 |

# வலி. தென்மேற்கின் பாதீடு நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.18

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் பாதீட்டுச் சபைக்கூட்டம் நேற்று இடம்பெற்றபோது தவிசாளர் ஜெசீதன் பாதீட்டு உரையை முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பாதீடு மீதான கருத்துகளை உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

28 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 20 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர். தேசிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். 2 உறுப்பினர்கள் சபை அமர்வில் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் வலிகாமம் தென்.மேற்குப் பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான பாதீடானது 14 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (ச-27)

# வழிபாட்டுத் தலங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

### பொலிஸ்மா அதிபர் உத்தரவு

கொழும்பு, டிசெ.18

மத வழிபாட்டுத் தலங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தரவிட்டுள்ளார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, சட்டம் ஒழுங்கைப் பேணவும் அமைதியான சூழலை உறுதி செய்யவும் அனைத்து சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

தங்களது பகுதிகளில் உள்ள மதத் தலைவர்களுடன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இணைந்து செயற்பட்டு, வழிபாட்டுத்தலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு.வூட்லர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அறிவுறுத்தல்களைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும்

### கல்வி அமைச்சு அதிகாரிகளுக்குப் பணிப்புரை



கொழும்பு, டிசெ.18

2025ஆம் கல்வி ஆண்டின் மூன்றாம் பாடசாலைத் தவணைக்காக தவணைப் பரீட்சைகளை நடத்தக்கூடாது என்ற அறிவுறுத்தல்களைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என கல்வியமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரைவிடுத்துள்ளது.

6 ஆம் தரம் முதல் 10 ஆம் தரம் வரையான மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சைகளை நடத்தவேண்டாம் என்றும் மாணவர்களை அடுத்த தரங்களுக்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும் 11 ஆம் தர மாணவர்களுக்கான மூன்றாம் தவணைப் பரீட்சையை நடத்தமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பிரதானமாக அனைத்துப் பாடசாலை அதிபர்களும் இந்த அறிவுறுத்தலைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்தவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

# டில்லிக்குச் செல்கிறார் நளிந்த

கொழும்பு, டிசெ.18

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இந்தியாவின் புதுடில்லியை நோக்கிப் பயணமாகியுள்ளார்.

இதன்போது இந்திய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். பேரிடரால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு இந்தியா வழங்கிவரும் நிதி, அபிவிருத்தி மற்றும் மருத்துவ உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இந்த விஜயம் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர்களின் அசமந்தம் யாழ்.மாநகரைப் பாதிக்கும்!

## நடைமுறைகளை இறுக்குங்கள்
## உறுப்பினர் மயூரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.18

**ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப் படாமை ஊழியர்களின் அர்ப்பணிப்பின்மையை வெளிப்படுத்துகின்றது. இந்த அசமந்தப்போக்கால் மாநகரசபை இடர்களைச் சந்திக்கின்றது என்று மாநகரசபை உறுப்பினர் மயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்.மாநகரசபை அமர்வு நேற்று இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆக்கபூர்வமானபலதீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொலித்தீன் பாவனைத் தடை, களியாட்ட நிகழ்வு ஒழுங்குபடுத்தல், சுகாதார நடைமுறை போன்று பல விடயங்கள் தொடர்பில் ஆறுமாதங்களாக காத்திரமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் எவையும்நடைமுறைப்படுத்தப் படவில்லை. ஊழியர்கள் பலர் முழுநேரப்பணிசெய்வதில்லை. மாநகரசபை உறுப்பினர்களின் உச்சகட்டப் பணி என்ன என்பது தெரிந்தாகவேண்டும். சிறந்த சுகாதாரம்மிக்க மாநகரசபையாக வளர்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் . எனவே எதிர்வரும் ஆண்டிலிருந்து தண்டப்பணம் அறவிடுதல், சுகாதாரநடைமுறைகள் என்பவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்- என்றார். (ச-26)



## மாசார் அ.த.க. பாடசாலையில் அதிபருக்கு எதிராகப் போராட்டம்

கிளிநொச்சி,டிசெ.18

பச்சிளைப்பள்ளி மாசார் அ.த.க பாடசாலை அதிபரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலைச் சமூகத்தினர் நேற்று அமைதிவழியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபரின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் பாடசாலைச் சமூகத்தைப் புறக்கணித்து தன்னிச்சையாக முடிவெடுத்தல் மற்றும் பாடசாலைக் கணக்கறிக்கைகளில் முறைகேடு, பாடசாலைக்கு வழங்கும் நன்கொடைகளில் ஊழல் மற்றும் சொந்தப் பகைமையைப் பயன்படுத்தி, பாடசாலை மாணவர்களைப் புறக்கணித்தல் போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டி, பாதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்னும் ஒரு மாதத்துக்குள் இதற்கான முடிவு கிடைக்கவில்லை என்றால் பாடசாலையை முடக்கி ஆர்ப்பாட்டம் செய்வோம் என்று பாடசாலை சமூகத்தினர் எச்சரித்தனர்.

இதுதொடர்பாக பளை கோட்டக்கல்விப் பணிமனை மற்றும் வலயம் மாகாணக்கல்வித் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஏற்கனவே முறைப்பாட்டுக்கடிதங்கள் வழங்கப்பட்டுள் என. அத்துடன் பச்சிளைப்பள்ளிப் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (சு-113)

## வெளிநாட்டு முதலீட்டை உள்ளீர்ப்பதும் அவசியம்

### ஹர்ஷ டி சில்வா ஆலோசனை

கொழும்பு, டிசெ.18

சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்தும் அதேவேளை, வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்ப்பதற்குரிய ஏற்பாடும் செய்யப்பட வேண்டும் என்று பொருளாதார நிபுணரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உலக வங்கியின் மதிப்பீட்டு அறிக்கை வெளியான பின்பே பேரிடர் இழப்புத் தொடர்பான சரியான தகவலைக் குறிப்பிடலாம். ஆயினும் 3 முதல் 4 பில்லியன் டொலர்வரை இழப்பு ஏற்பட்டிருக்கும் என்பது எனது தனிப்பட்ட கணிப்பாகும்.

மொத்த தேசிய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு கணித்தால் இழப்பு 3 சதவீதமாக அமையும். சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துவது நல்லது. அதை நான் எதிர்க்கவில்லை. எனினும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டுக்குக் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும். இன்று உலகம் மாறியுள்ளது. அதனால் வெளிநாட்டு முதலீடுகள் அவசியம் - என்றார். (எ-44)

## போதைப்பொருளுடன் இளைஞர் யாழில் கைது

யாழ்ப்பாணம், பொம்மைவெளியில் 210 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின்கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ். போதைத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்துள்ளனர். (ச-27)

## கீரிமலையில் நீராடத்தடை

யாழ்ப்பாணம்,டிசெ.18

சீரற்ற காலநிலையால் கடல்கொந்தளிப்பு நிலவுவதால், கீரிமலைக் கடலில் நீராடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இறந்தவர்களுக்கான பிதிர்க்கடன்களை நிறைவேற்றச் செல்வோருக்குக் கடலில் நீராடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் புனித தீர்த்தக் கேணியில் மட்டுமே கீரிமலைக்குச்செல்வோர்நீராடி வருகின்றனர். கீரிமலைக் கடல் தற்போது அதிக சீற்றத்துடன் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-ச-17)




## தண்ணியில கண்கட்டுவித்தை-2

அந்த மிசின் ஒன்டும் தண்ணியில இருக்கிற கிருமியளைக் காட்டிற கருவியில்லை. அந்த மிசினில ரண்டு கம்பியள் நீட்டிக்கொண்டிருக்கும். அந்தக் கம்பி அநேகமா இரும்பு இல்லாட்டி அலுமனியத்தில செய்யப்பட்டிருக்கும். நாங்கள் சோதிக்கக் குடுத்த தண்ணியை ஒரு கிளாஸுக்க விட்டிட்டு,அதுக்க அந்த மிசின்ர கம்பியை வைப்பினம். பிறகு மிசினிக்கு கரண்ட் குடுப்பினம். அப்பிடிக் கம்பியளுக்குக் கரண்ட் போகேக்க, அது தண்ணிக்குள்ள கரண்டைக் கடத்தும். இப்பிடிக் கரண்ட் கடத்துப்படேக்க, கம்பியளில உள்ள உலோகம் மெல்ல மெல்ல கரையப்பாக்கும். அப்பிடிச் செய்யேக்க கம்பி கறள் பிடிச்சமாதிரி வர, கழண்டுபோன உலோகக் கறள் தண்ணியில பரவி, அது சேத்துக் கலருக்கு மாறிடும். உண்மையில அவை கொண்டந்த மிசினில உள்ள கம்பியளுக்குக் கரண்ட் போனதால தான் தண்ணியின்ர கலர் மாறினதே தவிர, தண்ணியில இருக்கிற கிருமியள், ஊத்தையளால மாறேல. ஆனால் எங்களுக்குத் தண்ணியின்ர கலர் சேத்து நிறமா மாறேக்க, 'எங்கட தண்ணிதான் சரியில்லை' என்ட நினைப்பு வரும். அந்த நினைப்பைத்தான் தங்கட உழைப்புக்கு உந்தமாதிரி மோசடிக்காரர் பாவிக்கினம்.

தண்ணியை இலவசமாச் சோதிச்சு தாங்கள் ஏதோ சேவை செய்யிற மாதிரி வாறவையைப் பாக்க வீட்டுக்காரருக்கும் மனதளவில ஒரு நம்பிக்கை வந்திடும். தங்களுக்கு நல்லது செய்யிறதுக்காக வந்து, தண்ணியை இலவசமாச் சோதிச்சுத் தாறவையிட்ட வாங்கிற பில்டரும் நல்லாத்தான் இருக்கும், நம்பி வாங்கலாம் எண்டு நினைப்பினம். அப்பிடி நினைப்பை வரப்பண்ணுறதுதான் உந்த மோசடிக்காரரின்ர வெற்றி. பிறகு அவையள் நல்ல பிள்ளையள் மாதிரி, தங்கட பில்டரை எங்கட தலையில கட்டிப்போட்டு, இன்னொரு ஏரியாவில உள்ள சனங்களின்ர தலையில இப்பிடித் தண்ணியில வித்தை காட்டி உழைக்கப் போடுவினம். குடிக்கிறதுக்கு ஏத்த நல்லதண்ணியை , வீணா பில்டரை விலைகுடுத்து வாங்கி,வடிகட்டிக் குடிச்சுக்கொண்டிருப்பம். எங்களுக்குத் தேவையே இல்லாத பொருளை, 'அவசியம் உங்களுக்குத் தேவை' எண்டு நம்பப்பண்ணி, 80 ஆயிரம் ரூபாவுக்கு அதை விக்கிறதுக்கும் கெட்டித்தனம் வேணும். ஆனால் எங்கட சனம் ஏமாளியள் எண்டதால கனக்க கஷ்டப்படத் தேவையில்லை.

அதோட உண்மையில எங்கட உடம்புக்குத்தண்ணியில இருக்கிற கனிமங்கள், தாதுப்பொருளெல்லாம் குறிப்பிட்ட அளவில தேவை. ஆனால் தண்ணியை நாங்கள் உந்த பில்டரில வடிகட்டினால், எல்லாக் கனிமங்களும் வடிகட்டி, வெறும் உப்புச்சப்பில்லாத, சத்துகளும் இல்லாத தண்ணியைத்தான் குடிக்க வேண்டியிருக்கும். அப்பிடிச் சத்தில்லாத தண்ணியைக் குடிச்சு, நோஞ்சானாகி, வருத்தங்களும்வரும். அதால தண்ணியைச் சோதிக்கிறதெண்டால், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்ர ஒப்பீஸில, அவை சொல்றமாதிரி சாம்பிள் தண்ணியைக் குடுத்துச்செய்யுங்கோ. அதுமட்டும் தான் நம்பிக்கையான சோதினை. அதை விட்டிட்டு இப்பிடிரை கட்டின ஏமாத்துக்காரரிட்ட வீணாக் காசை இழக்காதையுங்கோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்

(ராசிபலன்)

**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச்செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சிதரும் நாள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவைப்படுகிறது.

**கன்னி:** உற்சாகத்துடன் செயற்படும் நாள். இளைய சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையக் கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகிமுடியும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக்காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சிதரும். சிலருக்குத் தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்றுச்சோர்வு உண்டாகும்.

# பசுமை அமைதி விருது - 2025
## பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.18

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் வருடந்தோறும் வழங்கப்படும் பசுமை அமைதி விருது - 2025, விருதுக்குரியவர்களைத் தெரிவுசெய்யும் சூழல் பொது அறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் காலை 8.30 மணி வரை இணையவழியில் பரீட்சை நடைபெறும்.

இந்தப் பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை கல்வி பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும். இலவசமாக நடைபெறவுள்ள இந்தப் பரீட்சையில் தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnationalgreen.org எனும் இணையத்தளத்தின் ஊடாக எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

250 மாணவர்களுக்கு பசுமை அமைதிச் சான்றிதழோடு, சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும். இவர்களில் முதல் 3 மாணவர்களுக்கு பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசில்களுடன் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமைஅமைதி விருது வழங்கப்படும். (சு-66)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.18

மீசாலை தென்மராட்சி பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ளது

இதில் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

# கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.18

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஊடாக நடத்தப்படும் நல்லூர்ப் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் 2026ஆம் ஆண்டுக்கான மனைப்பொருளியல் டிப்ளோமா தரச் சான்றிதழ் கற்கைநெறியுடன் இணைந்த ஆடை வடிவமைத்தலுக்கான தொழிற்றகைமை முறைமை கற்கைநெறி என்.வி.க்யூ.4 எதிர்வரும் தை மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கற்கைநெறியில் கலந்துகொள்ள விரும்புவர்கள் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்றவராகவும், நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவராகவும், 18 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட பெண்களாகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை நல்லூர்ப் பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவு மற்றும் நல்லூர் சங்கிலியன் மன்றம் ஆகிய வற்றில் பெற்று விண்ணப்பிக்க முடியுமென நல்லூர்ப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ச-41)



# கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கோப்பாய் பிராந்திய சபையால் கூட்டுறவாளர்கள் இருவர் கௌரவிக்கப்பட்டனர்.

சமாசத்தின் முன்னாள் செயலாளர் கோ.கௌரிதாசன் மற்றும் சாவகச்சேரி, கோப்பாய் முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தர் .ந. சிவகுமாரன் ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில், சபையின் உப தலைவர் திருமதி. த.தெய்வேந்திரராணி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்ட சி.க.வ.கூ.ச. சமாசத்தின் தலைவி திருமதி.ப.சறோஜினிதேவி, செயலாளர் திருமதி.பு. தயாளினி, கல்வி உத்தியோகத்தர் திருமதி.க.கௌரிதேவி, பணிப்பாளர் சபை உறுப்பினர் திருமதி.வி. மகேஸ்வரி மற்றும் சமாச வெளிக்கள உத்தியோகத்தர்கள், அங்கத்துவச் சங்கங்களின் பிரதிநிதிகள், கூட்டுறவு ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-20)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.18

இலங்கை முதல் உதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதட்சணாமூர்த்தி திருக்கோவிலில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது

திருவாசக முற்றோதலில் கலந்துகொள்ளும் அடியவர்கள் முன்கூட்டியே தொடர்பினை ஏற்படுத்தி வரவை உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒழுங்கமைப்புகளுக்காக பெயர், முகவரி, தொடர்பு இலக்கம் என்பவற்றை 0779236552 என்ற வட்சப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கவும் என்றும் இலங்கை முதல் உதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் கலாநிதி வை.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ச-159)

# கணினிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தின் கணினி வள நிலையத்தால், க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. மிகக்குறைந்த பயிற்சிக் கட்டணத்துடன் ஆரம்பிக்கப்படும் இந்தப் பயிற்சிநெறிக்கு, கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப் படிவத்தை, கல்வி அபிவிருத்திப்பிரிவில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## போக்குவரத்துப் பிரச்சினைக்கு முடிவில்லையா?

நெடுந்தீவுக்கான போக்குவரத்துப் படகுகள் பழுதடைந்துள்ளநிலையில், நெடுந்தாரகைப் படகும் தனது சேவையை வரையறுத்திருக்கின்றது. இதனால், நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துப் பெரும் அல்லோலகல்லோல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதுடன், அரச அதிகாரிகள் போன்ற தினசரிப் பயணிகளின் நிலையும் பரிதாபத்துக்கு உரியதாகவே மாறியுள்ளது. அண்மையில் நெடுந்தீவில் வெள்ளப் பேரிடர் மீட்பு நடவடிக்கைக்காகச் சென்ற அரச பணியாளர்கள், போக்குவரத்து மார்க்கம் இல்லாமல் நடுவழியில் நின்றமை, நெடுந்தீவின் போக்குவரத்துத் துறை எத்தகைய மட்டத்தில் அமைந்துள்ளது என்பதற்குக் காத்திரமான கட்டியக் குறிப்பாக அமைந்திருக்கின்றது.

நெடுந்தீவின் சுற்றுலாத்துறையில் தற்போது கணிசமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. வடக்கு மாகாணத்துக்குவரும் தென்னிலங்கைச் சுற்றுலாவிகளும், வெளிநாட்டுச் சுற்றுலாவிகளும் பயணிக்க விரும்பும் கேந்திர நிலையங்களில் நெடுந்தீவும் ஒன்று. ஒரு நாட்டை அல்லது ஒரு பிரதேசத்தை துரித அபிவிருத்தி காணச்செய்வதற்கு, அதில் சுற்றுலா சார்ந்த முதலீட்டையும், போக்குவரத்துக் கட்டமைப்பையும் காலத்துக் காலம் மேம்படுத்திச் செல்வது மிக அவசியம். ஆனால், நெடுந்தீவுக்கான அனைத்துப் போக்குவரத்து வாய்ப்புகளும் அடைக்கப்பட்டு, அதுவொரு சபிக்கப்பட்ட தீவாகிவிட்டதோ என்று எண்ணும் அளவுக்குத்தான் அதிகாரத்தரப்பின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

நெடுந்தீவின் கடல் சார்ந்த போக்குவரத்துப் பிரச்சினை தற்போது புதிதாகத் தோன்றியுள்ள விடயமல்ல. இது நீண்டகாலப் பிரச்சினை. ஆனால், காலத்துக்காலம் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றனவே தவிர, நிரந்தரத் தீர்வொன்றைக் காணும் எவ்வித புதிய எத்தனங்களும் இடம்பெற்றதாக இல்லை. தரமான - வினைத்திறன்மிக்க உள்ளூர்ப் படகுகளை, பொதுக் கட்டமைப்புக்கு உட்படுத்தி நெடுந்தீவின் போக்குவரத்தை வளப்படுத்தமுடியும். இதன்மூலம் அங்குள்ள குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புகளும் வாழ்வாதாரமும் கிடைத்ததாக அமையும். ஆனால், அரசாங்கம் அத்தகைய திட்டங்களின் ஆரம்பப் புள்ளியில்கூட இல்லை என்பதே உண்மை.சில தினங்களுக்கு முன்னர், பத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகளுடன் நெடுந்தீவுக் கடற்பரப்பில் பயணித்த படகொன்று, விபத்துக்கு உள்ளாகி மூழ்கியதும், கணநேரத்தில் அங்கு சென்ற மற்றொரு படகால் அவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டதும் நினைவிருக்கலாம். அந்தச் சம்பவத்தின் பின்னர், நெடுந்தீவின் போக்குவரத்தில் கவனம் கொள்ளாத அதிகாரிகளே இல்லை என்னும் அளவுக்குப் பலரும் பல்வேறு விதமான கருத்துகளை முன்வைத்தனர். கடந்தவாரம் நெடுந்தீவின் மாவலித்துறையில் படகில் கயிறு தடுக்கியதில் ஒருவர் கடலில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந் தது. ஆனால் இந்தச் சம்பவங்கள் மீதான ஊடக வெளிச்சம் அடங்கிய பின்னர், கிணற்றில் போடப்பட்ட கல்லாக நெடுந்தீவின் போக்குவரத்து விவகாரம் தேங்கிக் கிடக்கின்றது.தீவகப் பகுதிகளை வளர்ச்சியடையச் செய்யவேண்டும் என அரசாங்கம் அண்மைக்காலமாகக் கொண்டுள்ள நோக்கம் சிறந்தது. ஆனால், வெறுமனே முதலீடுகளை மட்டும் மேற்கொள்வதால் வளர்ச்சி ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை. இனியும் நெடுந்தீவினைச் சபிக்கப்பட்ட தீவாக வைத்திராமல், அதனை பசுமைத் தீவாக, சுற்றுலாத்தீவாக மிளிரச்செய்ய படகுச் சேவையில் எவ்வித தடையும் வராமல் உரிய நடவடிக்கைகளை அதிகாரிகளும், அரசாங்கமும் எடுக்க வேண்டும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### நாளொரு நல்வார்த்தை

நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால்
அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.

—அன்னை தெரசா—



## வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு பேரிடரால் ரூ.75 பில்லியன் இழப்பு!

**கொழும்பு, டிசெ.18**

**இயற்கை இடரால் வீதிகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ள நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சுமார் 75 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாய மேம்பாடு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அதிலேயே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட பேரழிவின் தன்மை மற்றும் அதனால் ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சேதங்களை மதிப்பிடுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது. சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களை முழுமையாக மீட்டெடுக்கவும், மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய நடவடிக்கைகளுக்கும் சுமார் 190 பில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)



## விவசாய ஓய்வூதியம் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, டிசெ.18

'டித்வா' புயல் நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலான ஓய்வூதியம் வழங்குவதற்கான கால அவகாசத்தை டிசெம்பர் 31ஆம் திகதி வரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுவாக விவசாய ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வழங்கப்படும்.

எனினும், அனர்த்த நிலைமை காரணமாகத் தபால் நிலையங்களுக்குச் செல்லும் வீதிகள் சேதமடைந்துள்ளதால் ஏற்படும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற்கொண்டு, இம்முறை அந்தக் காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக 413 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை அறிவித்துள்ளது. (ச-இ)

## பத்மேவுக்கு சொந்தமான ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிசெ.18

பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலின் தலைவரான கெஹெல்பத்தர பத்மேவுக்கு சொந்தமான ஆயுதங்கள் சிலவற்றை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கெஹெல்பத்தர பத்மேவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் வெளிநாட்டில் உள்ள மற்றுமொரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரின் பராமரிப்பில் நாட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பிஸ்டல் ரக துப்பாக்கி ஒன்றும், ரி-56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு மகசின்களும், 267 ரி-56 ரக தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ-இ)

## ஐஸ் போதையுடன் கான்ஸ்டபிள் கைது

தெமட்டகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், கொழும்பு நகர மதுவரிப்பிரிவு அதிகாரிகளால் தெமட்டகொட பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளிடமிருந்து 200 கிராம் 'ஐஸ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 25 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## தக்ஷிக்கு 'சிக்னல்' காட்டிய சார்ஜன்ட் பணி இடைநீக்கம்

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் 'கணேமுல்ல சஞ்சீவ' என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 90 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களில் ஒருவரான நந்தகுமார் தக்ஷி என்பவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அந்தச் சார்ஜன்ட், சந்தேகநபர் தக்ஷியுடன் ஒரு பிஸ்கட்டை இரண்டாகப் பிரித்துப் பகிர்ந்து உண்டார் என்றும் சைகைகள்மூலம் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பில் கொழும்பு மாவட்டக் குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. (ச-இ)

### நாளை

வெள்ளிக்கிழமை - மார்கழி 04

19.12.2025

சுபநேரம் : 06.23 - 07.53

ராகுகாலம் : 10.53 - 12.23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 26 . 06 . 2001



உதிர்வு 14 . 12 . 2025

## மனோஜ் முத்துலிங்கம்

பதுளையைப் பிறப்பிடமாகவும், 158/1 நாவலர் வீதியில் வசித்தவருமாகிய மனோஜ் முத்துலிங்கம் அவர்கள் கடந்த 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் முத்துலிங்கம் - லக்சுமி தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், கீர்த்தனா, துஷிதரன், சோபனா, ஹரிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மந்திரம் - சீதா இலட்சுமி, வீரபுத்திரன் - இலட்சுமி ஆகியோரின் செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.12.2025 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60206) E

தொடர்புகளுக்கு: 076 420 1398

தகவல்: குடும்பத்தினர் (குமார்) முத்துலிங்கம்

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 05 . 1961



மறைவு 14 . 12 . 2025

## தேவதாசன் ஜோர்ஜ் குலேந்திரன்

மருதடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தேவதாசன் ஜோர்ஜ் குலேந்திரன் அவர்கள் கடந்த (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவதாசன் - புஸ்பராசாத்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கில்டா (சுமதி) அன்புக் கணவனும், மிருணாளினி, வினுசியா, கெனிகிஷானி, மிதுசாளினி, அபிஷேக் ஆகியோரின் அன்புத் தந்தையும், சியாம்சன், விக்ஷனன், நந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அனிஸ், அஸ்வித்தா ஆகியோரின் பாட்டனாரும், சுமந்திரன், சந்திரா காலஞ்சென்ற இந்திரன், மகேந்திரன், றோய்ஸ் ரவீந்திரன், பெர்னார்ட் பாலேந்திரன், காலஞ்சென்ற கிங்சிலி புவநேந்திரன், மற்றும் சர்மிலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவராசா, கமலஸ் றொபின்சன், , சுரேஷ், சதீஸ், காலஞ்சென்ற சமீஸ் ஆகியோரின் மைத்துனரும், அமுதா, வசந்தரூபி, ரணித்தா, ராதா, ஜெர்மிலா, சுமத்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (18.12.2025) வியாழக்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 03.00 மணியளவில் புனித திரெசாள் ஆலயத்திற்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (CR/60208) J-1

மகள் மிருணாளினி - 077 064 9699
மகன் அபிஷேன் - 0033 773 410 253

## இயற்கை இடரில்
# பெற்றோரை இழந்து73 சிறுவர்கள் தவிப்பு

அனர்த்தங்கள் காரணமாக 73 சிறுவர்கள் பெற்றோரை இழந்துள்ளனர் என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தச் சிறுவர்கள் தாய், தந்தை அல்லது பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கண்டி மாவட்டத்தில் 20 சிறுவர்கள் தாய், தந்தை அல்லது பெற்றோரை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## கடை வாடகைக்கு

24, சேர்க்குலர் வீதி, யாழ்ப்பாணத்தில் பேருந்து நிலையத்திலிருந்து 200m தூரத்திற்கு அருகாமையில் (துபாற்கந்தோர், பண்ணைக்கு அருகாமையில்) இரண்டாவது மாடி (5000 சதுர அடி), கீழ்த்தளத்தில் 2 கடைகள் (640 சதுர அடி) வாடகைக்குண்டு.
Super Market நடாத்துவதற்கு உகந்த இடம்.

077 977 0701, 077 605 1468


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 14.03.1949 மறைவு 15.12.2025

எமது வேரற்கேணி கந்தசுவாமி ஆலய பரிபாலன சபையின் உபசெயலாளராகிய ஜே.ஜேம்ஸ்யூலியன் அவர்களினதும், அங்கத்தவரான ஜே.யூட்ஜீவன் அவர்களினதும் அன்புத் தாயார்

அமரர்

**யேசுராஜன் மனோறஞ்சிதமலர்**


அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு துயருறுவதுடன் அன்னாரின் பிரிவால் துவழும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வேரற்கேணி கந்தசாமியாரை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தென்மட்டுவில்
வேரற்கேணி கந்தசாமி ஆலய பரிபாலன சபையினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 07 . 1945



மறைவு 16 . 12 . 2025

## தம்பிப்பிள்ளை சங்கரலிங்கம் (சங்கர்)

(முன்னாள் ரெலிக்கொம் ஊழியர்)

32, சுவாமியார் வீதி கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்ட தம்பிப்பிள்ளை சங்கரலிங்கம் கடந்த 16.12.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்த்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜாம்பிகையின் (மாலினி) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் - சிவாம்பிகை தம்பதியின் மருமகனும், துர்க்கா (பிரான்ஸ்), துஷியந்தன் (ரெலிக்கொம்-யாழ்), கஜேந்திரன் (பிரான்ஸ்), காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன் (பிரான்ஸ்), கேமினி (உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை), விறோஜா (பிரான்ஸ்), பவித்ரன் (மேற்பார்வை முகாமையாளர் புகையிரதப் பாதை புகையிரதத் திணைக்களம் மதவாச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கரிஸ், பிரீத்தி, கரணி (பிரான்ஸ்), கன்சினி, தனுசிகன், ஆகித், கியாரா (பிரான்ஸ்), டன்ஷிஜா, திக்சஜாவின் பாசமிகு பேரனும், அன்னபூரணம் (லண்டன்), கமலாம்பிகை (லண்டன்), தவமணி, இராசலிங்கம், தையல்நாயகி (லண்டன்), இராஜேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, புலேந்திரன், செல்வராசா, ஜெகசோதி, சிறிகரன், சண்முகராசா, இராஜேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60201) E


32, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 03 . 1969



மறைவு
16 . 12 . 2025

## நடராசா லிங்கபாலன்

**(முன்னாள் கிளைமுகாமையாளர் - தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

தோலகட்டி வயாவிலானைப் பிறப்பிடமாகவும், கலட்டி சங்குவேலி தெற்கு மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட நடராசா லிங்கபாலன் அவர்கள் 16.12.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கம் நடராசா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், நிஷாந்தன் (கட்டார்), பிரசாந்தன் (Security Gurd - Commercial Bank - Chunnakam), நிஷானி (முன்பள்ளி ஆசிரியை), கிருஷாந்தி (தொழில்சட்டக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணபாலன் (நில அளவையாளர்), நிர்மலராணி (பிரான்ஸ்), வதனராணி (ஓய்வுபெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), றஞ்சிதா, ஜெயந்தா, தனபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகமலர், கோபாலகிருஷ்ணன், காலஞ்சென்ற சந்திரசேகரன், யோகலிங்கம், கிருஷாந்தி, சிவசோதி, வசந்தகுமாரி, நிர்மலானந்தன், சிவானந்தன், ஆனந்தராசா, ஆனந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கலட்டி,**
**சங்குவேலி தெற்கு,**
**மானிப்பாய்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 60202) E

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 06 . 1937



மறைவு
14 . 12 . 2025

## வைத்திலிங்கம் இரத்தினசிங்கம்

**இளைப்பாறிய செயலாளர், நகர சபை, வவுனியா**
**(இலங்கை நிர்வாக சேவை)**

காளிகோவிலடி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இரத்தினசிங்கம், (இளைப்பாறிய செயலாளர், நகரசபை, வவுனியா - இலங்கை நிர்வாக சேவை) அவர்கள் கடந்த (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திலகவதி, (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவரும், புஸ்பவதி, தனலட்சுமி, சாரதாதேவி, விமலாதேவி, ரஞ்சினி, வசந்தி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராஜசிங்கம் மற்றும் விஜயரட்ணம், இரவீந்திரன், பரமநாதன், புஸ்பராஜா, காலஞ் சென்றவர்களான இராசரத்தினம், அருளம்பலம், செல்வரத்தினம், அரசரத்தினம், மாசிலாமணி, பவளமணி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சிறுப்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சிறுப்பிட்டி கிழக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 691 3100, 077 757 4848**

(CS/46716) J-1

# வெவ்வேறு விபத்துகள்; ஆறு பேர் உயிரிழப்பு!

நாட்டின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துகளில் பெண் ஒருவர் மற்றும் இரு இளைஞர்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். சிலாபம் ,குளியாப்பிட்டி, புல்மோ ட்டை, தவுலகல, மிகிந்தலை மற்றும் சிகிரியா ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இ ந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளன. (ச-இ)




# 31ம் நாள் நினைவுப் பூக்கள்

## அமரர் நவரத்தினம் பாக்கியலீலா

**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

**திதி: சதுர்த்தசி**



அன்போடு வாழ்ந்த காலம் பண்போடு பழகிய நாட்கள்
கண்முன்னே நிற்கையிலே காற்றோடு காற்றாக கலந்தீரே
நல்ல மனிதம் நிறைந்த உம்மை மறக்கமுடியுமா?

வனப்புமிகு இலங்கைத் திருநாட்டில்
எழில்மிகு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்
ஏற்றம்மிகு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும்
கொண்ட மாட்சிமிகு பாக்கியலீலா
நவரத்தினத்தின் பாசம்மிகு இல்லக்கினத்தியாயிருந்து
ஐந்து ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் மகளையும் பெற்று
புதல்வரை உயர்பட்டம் பதவி பெற வைத்து
அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து
பேரப்பிள்ளைகளையும் பூட்டப்பிள்ளைகளையும் பெற்றெடுத்தார்
நாற்பத்திரண்டு ஆண்டுகள் ஆசிரியராய்ப் பணிபுரிந்து
மாணவரை அன்புடன் அரவணைத்து
கல்வி விளக்கை ஏற்றி வைத்தார்
அவர் சகஆசிரியர்களுடன் அன்பாக பண்பாக
பழகிய காலம் மறக்க முடியாது.
பிறர் தேவையறிந்து உதவிய காலம்
பிறர் துன்பம் கண்டு துவண்ட காலம்
நண்பருடன் இனிமையாய் பழகிய காலம்
அயலவரை அன்புடன் அரவணைத்த காலம்
உறவினரை இனிதே போற்றிய காலம்
மக்கள் உள்ளங்களில் நிழலாடுகிறது
எதிர்பாராமலே மின்னலாய் மறைந்தாலும்
அனைவர் இதயங்களிலும் நிறைந்துள்ளீர்

பிறப்பும் இறப்பும் நிசமாயினும் தங்கள் இனிய நடத்தை மனதை வருடுகிறது
உங்களுடன் பயணித்தவர்களால் உங்களை மறக்க முடியாது
உங்கள் ஆத்மா சாந்திபெற ஒட்டங்கேணிப் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

"தூங்குவது போலும் சாக்காடு தூங்கி விழிப்பது போலும் பிறப்பு"
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**மலர்வு**
**28.10.1947**

**உதிர்வு**
**18.11.2025**

**நவஜீவனம்**
**கச்சாய் வீதி, கொடிகாமம்**

**குடும்பத்தினர்**

(CR 46711) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழகப் பிரமுகர்களுடனான சந்திப்பு வரவேற்கத்தக்கது!

## சித்தார்த்தன் தெரிவிப்பு

தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக அரசியல் பிரமுகர்களைச் சந்திப்பதற்கு சென்னை சென்றுள்ள விடயம் நன்மைக்குரியதே என்று தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை இலங்கை அரசாங்கம் திணிக்க முயற்சிக்கின்றதாகத் தெரிவித்து இதனை எதிர்ப்பதற்கு, தமிழக அரசியல் பிரமுகர்களின் ஆதரவு தேவை என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியப் பேரவையினர் சென்னைக்குப் புறப்பட்டுள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய நிலமையில், எமது பின்னடைவுகள் தொடர்பில் தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்களு டனேயோ அல்லது வேறு தரப்பினரிடையேயோ கலந்துரையாடி, அவர்களுக்குத் தெளிவுபடுத்துவது நல்ல விடயமே.

மாறுபட்ட கருத்துகள் இருக்கின்ற விடயங்கள் குறித்துப் பேசினால், அது வேறாக இருக்கும். ஆனால் இந்தச் சந்திப்பில் மாறுபட்ட கருத்துகள் இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் இருக்காது என்று நம்புகின்றேன்.

ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை அரசாங்கம் கொண்டுவரப்போவதாக உறுதியாக எந்த இடத்திலும் கூறவில்லை. ஆகையால் நாங்களே கற்பனையில் ஒரு விடயத்தை உருவாக்கிவிட்டு, அதனைச் சிக்கலாக எடுப்பது நல்லதாகத் தெரியவில்லை. அரசாங்கம் முதலில் தமது கருத்தை சொல்லட்டும், அரசியலமைப்பைக் கொண்டு வரட்டும், அதன்பின்னர் பார்க்கலாம்- என்றார். (சு-27)

# கடத்த முற்பட்ட கேரளக் கஞ்சா முல்லைத்தீவில் கைப்பற்றல்!

## சந்தேகநபர் தப்பியோட்டம்



முல்லைத்தீவு சாலைப் பகுதியிலிருந்து கடத்த முற்பட்ட 140 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது வாகனச் சாரதி தப்பியோடியுள்ளார்.

கடற்படையினர், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு நேற்றுக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு சாலை கடற்கரைப் பகுதியில் கடல் வழியாகக் கடத்திவரப்பட்ட கேரளக் கஞ்சாவை தரைவழிப்பாதை ஊடாக கடத்த முற்பட்டபோதே கைப்பற்றப்பட்டது.

வாகனம் யாழ்ப்பாணம் கிளாலிப் பகுதியைச் சேர்ந்தவருடையது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (ச-19)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 10 . 1950



மறைவு 17 . 12 . 2025

### விசுவநாதர் இராசரத்தினம்

மாதகல் காஞ்சிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் இராசரத்தினம் அவர்கள் நேற்று (17.12.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்கண்டு - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், சற்குணதேவி அவர்களின் அன்புக் கணவரும், வினிதினி (சுவிஸ்), சஞ்சீவன் (Factory Manager, Northsea Limited), ஜெகதீஸ்வரன் (கனடா), விஜிதரன் (ஜெர்மனி), கவிதா (சட்டத்தரணி, மல்லாகம் நீதிமன்றம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம், மகேஸ்வரி மற்றும் சிற்றம்பலம், சுப்ரமணியம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பரமேஸ்வரி, பத்மநாதன், காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் புவனேஸ்வரி; சாந்தகுமாரி, சிவாஜி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணாமூர்த்தி (சுவிஸ்), அபிசுஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் மாவட்ட செயலகம்), குகசத்தியா (கனடா), ஜனனி (ஜெர்மனி), தனோஜன் (Assistant Manager, NTB Bank, Kandy) ஆகியோரின் அன்பு மாமனாரும், கதீசன், கபிஷா, அபினா, தாரணி, ஷஸ்விகா, அஸ்மிகா, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாதகல் இந்து போதி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 60205) E

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் இதயபூர்வமான கண்ணீர் பூக்கள்




காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின்
ஸ்தாபகரும், தலைவருமாகிய
கலைச்சுடர்
**திரு. ந. சோதிநாதன்** அவர்களின்
அன்புத் தந்தை
**திரு. வேலுப்பிள்ளை நடராசா**

அவர்கள் காலமானார் எனும் செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அன்னாரின் ஆன்மா ஈழத்து சிதம்பர தில்லை கூத்தன் திருவடிகள் சேர எமது இதயபூர்வமான கண்ணீர் பூக்களால் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**நிர்வாகத்தினர்**
**ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.**
**கிழவன்காடு கலாமன்றம்**
**காரைநகர் - யாழ் கிளை**

(CS/60210) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 12 . 1952



மறைவு 16 . 12 . 2025

### அமிர்தலிங்கம் இராசதேவி

தாவடி தெற்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் இராசதேவி அவர்கள் கடந்த 16.12.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராமாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் அமிர்தலிங்கம், அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இந்திரராசா, சூரியகுமார் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மானிப்பாய் வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**க.இராஜபத்மநாதன் (மைத்துனர்)**
**074 191 0721**

(CS 60209) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் வயல் நிலங்களை ஊடறுத்து பாதுகாப்பு வேலி!

*மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை கொக்குத்தொடுவாயில் அடாவடி*

**கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக மானாவாரி விவசாயநிலமான கூமடுகண்டல்பகுதியில் தமிழ்மக்களின் நெற்செய்கை நிலங்களை ஊடறுத்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் அடாவடித்தனமாக யானைவேலி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.**

அங்கு நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடனும், கமநலசேவைநிலைய உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

தமிழர்களது பூர்வீக விவசாயநிலமான கொக்குத்தொடுவாய் கூமடுகண்டல் பகுதிக்கு அருகில் மகாவலி அதிகாரசபையால் அபகரிக்கப்பட்டு பெரும்பான்மையினத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகத் தெரிவித்து தமிழ்மக்களால் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்செய்கையை ஊடறுத்து மகாவலி அதிகாரசபையினர் யானை வேலி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் என்று கொக்குத்தொடுவாய் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களால் நெற்செய்கை பண்ணப்பட்டுள்ள அவர்களது பூர்வீக விவசாயக் காணிகளையும் ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே, இவ்வாறாக மகாவலி அதிகாரசபை அடாவடித்தனமான முறையில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், விவசாயிகள் மற்றும் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்களிடம் இது தொடர்பில் கேட்டறிந்தார். இதுதொடர்பில் உரிய இடங்களுக்குத் தெரியப் படுத்தி மகாவலி அதிகாரசபையின் இத்தகைய அத்துமீறல் செயற்பாட்டுக்கெதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

(எ-26,246,110)

## நெடுந்தீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் நேற்றுப் புதன்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில், இலங்கை முழுவதும் அதிகூடிய மழைவீழ்ச்சியைப் பெற்ற இடமாக நெடுந்தீவு பதிவாகியுள்ளது.

இந்தக் காலப்பகுதியில், அச்சுவேலியில் 52.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரில் 46.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 44.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப்பாணம் பண்ணையில் 44.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வடமராட்சி அம்பனில் 33.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சாவகச்சேரியில் 25.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-66)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை உபஅலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் - செல்லையா வரதராசா
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் - சொந்தக்காரர் உரிமைகோருபவர்

ஆதன இல 17/9, வீதி - தம்பதம்பி வீதி (குமாரகோயில் வீதி). வட்டாரம் -03 வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 03, தம்பதம்பி வீதி குமாரகோவில் வீதி) ஆதன இல 17/9 இல் அமைந்துள்ள தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை கொக்கன் என்ற ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.
குறித்த ஆதனம் ஆனது 15.07.2021 ஆம் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ், சத்திய ஆணையாளர் கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்கள் முகதாவில் இல 12589 இல் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியால் வெளிப்படுத்தப் பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாயுறுதியானது சட்டத்தரணியும் நொத்தாரிசுமான கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களினால் 2017.02.23ம் திகதிய 11082 ம் இலக்க பிரகடன உறுதியில் சிவானந்தன் திலக்ராஜ்குமார் மனைவி சுகன்யா பின்வருமாறு பிரகடனப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிஸ் க.சிவசுப்பிரமணியம் முகதாவில் 2012.04.12ம் திகதிய 8014ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி அவரின் 2ம் பெயர்வழியின் காலஞ்சென்ற மாதா வெற்றிவேலு செல்வரத்தினம் கைம்பெண் பரமேஸ்வரி குறித்த ஆதனத்தை 2ம் பெயர்வழிக்காரர் சுகன்யாவிற்கு நன்கொடையாகக் கொடுத்திருந்தார். எனினும் குறித்த பிரதேசம் அரசபடையினரின் கட்டுப்பாட்டில் இருந்ததாலும் இவ்வாதனம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கைதவறி இருந்தமையாலும் இவ்வாதனம் ஆதியில் இருந்தபடி சொரியலாய் எழுதப்பட்டதென்றும் ஆனால் அண்மையில் இவ்வாதனம் தம்மிடம் பாதுகாப்புப் படையினரால் கையளிக்கப் பட்டுள்ளதால் இதன் அயல் காணிக்காரர்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது என்றும் அயல்காணிக்காரர்களால் தரப்பட்ட ஆவணங்களில் இருந்து எமது ஆதனம் நிலஅளவையாளர் யு.சந்தியாப்பிள்ளை அவர்களால் 1978.10.21ம் திகதி 309ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின் படி துண்டு 5 நிலப்பரப்பு 04 குளி 01.0 எனவும் துண்டு 6 நிலப்பரப்பு 02 குளி 06.3 ஆக இரண்டும் கூடி மொத்த நிலப்பரப்பு 06 குளி 7.3 என நிந்தமான ஆதனமாக இருந்தது என்றும் குறித்த இவ்வாதனம் நிந்தமான ஆதனமாக காணிப்பதிவகத்தில் பதிவு செய்வதற்காக இந்த உறுதியினை முடித்ததாகக் கூறியுள்ளார்.

மேலும் குறித்த ஆதனம் சுப்பிரமணியம் செல்லத்துரை என்பவரால் அவருடைய மகன் செல்லத்துரை சேனாதிராஜாவுக்கு 1960ம் ஆண்டு நன்கொடை அளிக்கப்பட்டது. எனினும் இந்த உறுதிப்பத்திரம் வலிகாமம் வடக்கில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக தொலைந்துவிட்டது. யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தேடியும் அதன் பிரதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. செல்லத்துரை சேனாதிராஜா அவர்கள் இவ்வாதனத்தை எவருக்கும் பாரப்படுத்தாது காலமாகிவிட்டார். காலஞ்சென்ற செல்லத்துரை சேனாதிராஜா அவர்களுக்கு சேனாதிராஜா சாந்திக்குமார், சேனாதிராஜா ராஜ்குமார், சேனாதிராஜா ஜெயக்குமார் என 03 ஆண் பிள்ளைகள் உள்ளனர் எனவும் பின்னர் இவ்வாதனம் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய வேலுப்பிள்ளை சிற்றம்பலம் கணேசலிங்கம் அவர்களால் 24.01.2001 ஆந் திகதிய 69ம் இலக்கம் கொண்ட நன்கொடை உறுதி மூலம் அவர்களின் 2ம் பெயர்வழியின் தாயாரான காலஞ்சென்ற வெற்றிவேலு செல்வரத்தினம் கைம்பெண் பரமேஸ்வரி அவர்களுக்கு சேனாதிராஜா சாந்திக்குமார், சேனாதிராஜா ராஜ்குமார், சேனாதிராஜா ஜெயக்குமார் ஆகியோரால் நன்கொடை அளிக்கப்பட்டது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை (வலிவடக்கு பிரதேச செயலாளர் பிரிவு வலிவடக்கு பிரதேசசபை பகுதி கிராம அலுவலர் பிரிவு இல J/235) "கொக்கன்" நிலப்பரப்பு 10.1/8 இதற்கு எல்லைகள்
கிழக்கு வேலுப்பிள்ளை நன்னித்தம்பிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்
வடக்கு -செல்லையா நடராசா ஐயரின் ஆதனம்
மேற்கு - வேலுப்பிள்ளை அருளம்பலத்தின் ஆதனம்
தெற்கு - முருகேசு இளையதம்பியின் ஆதனமும் கையொழுங்கையும்

இதில் சொரியலாய் அரைவாசி, இது நிலஅளவையாளர் A.சந்தியாப்பிள்ளை அவர்களால் 1978.10.21ம் திகதி 309ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின்படி துண்டு 5 நிலப்பரப்பு 04 குளி 01.0 எனவும், துண்டு 6 நிலப்பரப்பு-02 குளி 06.3 எனவும் காட்டப்பட்டுள்ளது. இவ்விரு ஆதனங்களும் ஒன்று சேர்ந்து ஒரே ஆதனமாக நிலப்பரப்பு 06 குளி 7.3 என காட்டப்பட்டுள்ளது. இது மீண்டும் நில அளவையாளர் V.தவராஜா அவர்களால் 2018.05.04ம் திகதி 1634ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின் படி துண்டுகள் 1.2.3 எனக் குறித்தபடி நிலப்பரப்பு 06 குளி 7.3 எனக் காட்டப்பட்டுள்ளது. இதில் நில அளவையாளர் V.தவராஜா அவர்கள் 04.05.2019ஆந் திகதி 1935ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின் படி துண்டு C எனக் குறித்த ஆதனம் நிலப்பரப்பு 01 குளி 9 எனக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு 01 குளி 9 இற்கு எல்லைகள்,

கிழக்கு - 1935ம் இலக்கப் படத்தில் துண்டு B எனக் குறித்த ஆதனம்
வடக்கு - செல்லையா நவரத்தினத்தின் ஆதனம்
மேற்கு - இராசலிங்கம் கைம்பெண் அழகம்மாவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
தெற்கு - புகையிரத நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆதனம் இதடங்கலும்,

அத்துடன் குறித்த படத்தில் துண்டு A எனக் குறித்த ஒழுங்கை ஊடாக இதற்குரிய பாதை பாவிப்புரித்தும்
மேற்குறித்த ஆதனம் செல்லையா வரதராசா மனைவி புவனேஸ்வரி என்னும் பெயரில் வலிகாமம் வடக்கு பிரசேசபையின் காங்கேசன்துறை உப அலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். மேற்படி ஆதனப் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களுடன் எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் செல்லையா வரதராசா மனைவி புவனேஸ்வரி எனும் பெயரிற்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சகல பிரச்சினைகளிற்கும் விண்ணப்பதாரியே முழுப்பொறுப்பாளியாவார் எனவும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேன்துறை.(கொல்லங்கலட்டி)

(CS/60204) J-1

## பெயர் மாற்றம்

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் வசிக்கும் சந்தியாகு செல்வி பத்மா ஆகிய நான் எனது பெயரை செல்வி பற்றிமா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் செல்வி பற்றிமா என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

செல்வி பற்றிமா

(CS/69203) J-1

NIPPON®
The Original
பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இல்லை,
ஒரிஜினல் A தரமுள்ள பொருட்களை பயன்படுத்தி செய்யப்பட்டது.
தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நேரடியாக தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.
No.1 Seller




1 YEAR
0.6L
1L
1.5L
1.8L
2.2L
2.8L
4300 upw

நாடுப்பூராகவும் உள்ள முன்னணி விநியோகஸ்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்...
லங்கா நிப்போன்
20, Keyzer Street, Colombo 11. 011 2437735 / 011 2437736
info@lankanippon.com | www. lankanippon.com
போலிகளில் அவதானமாயிருங்கள்..!

## 9ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



நிரஞ்சலா ஜெகசோதி

தோற்றம் 04.11.1970
மறைவு 18.12.2016

இம்மண்ணுலகில்
பிறந்த உனக்கு
மகுடம் சூட்ட
நினைத்தோம்
ஆனால்
இம்மண்ணுலகில்
வாழ்ந்தது போதும்
என்று விண்ணுலகம்
சென்றுவிட்டாய்.
எங்கள் கண்ணீர்
அஞ்சலியை
மகுடமாக
சூட்டுகிறோம்.

இல- 40, சுவர்ணா வீதி,
கொழும்பு - 06

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நெருக்கடி தீவிரமாகுமாம்!

## ஆரூடம் கூறுகின்றார் விமல் வீரவன்ஸ



**கொழும்பு, டிசெ.18**

**நத்தார்த் தாத்தாவைப் போன்று ஜனாதிபதி நிவாரண வாக்குறுதிகளை அள்ளி வழங்குகின்றார். எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் பொருளாதார நெருக்கடி தீவிரமடையும். மக்கள் வீதிக்கு இறங்குவார்கள் என்று தெரிவித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ.**

கடுவலை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நேற்றுமுன்தினம் விமல் வீர வன்ஸ நிவாரணங்களை வழங்கினார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனா திபதி நத்தார்த் தாத்தாவைப் போன்று நிவாரண வாக்குறுதிகளை அள்ளிவழங்கினார். ஆனால் பெருமளவிலானோருக்குக் குறைந்தபட்சம் 25 ஆயிரம் ரூபா கூட கிடைக்கப்பெறவில்லை.

அனர்த்தத்தின்போது முப்படையி னர் தான் நாட்டு மக்களைப் பாது காத்தார்கள். இராணுவத்தின ருக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் போலியான குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அந்தக்குற்றச்சாட்டுகளுக்கு எதிராக அரசாங்கம்செயற்பட வேண்டும். புலம்பெ யர் தமிழ் அமைப்புகளின் நன்கொடைகளுக்கு அடிபணிந்து இராணுவத்தினரை அரசாங்கம் காட்டிக் கொடுக்கக்கூடாது- என்றார். (எ-இ)

# வரைவுள்ள வெங்கலச்செட்டிகுளம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டஅறிவித்தல் - 20.12.2025

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2456/03 இலக்க 2025.09.29 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும், மற்றும் கிளைப்பொதுச்சபையுடன் கூடிய கிளைக்குழுக்களைக் கொண்டு இயங்கும் ஆரம்ப நிலைக்கூட்டுறவுச் சங்கங்களினதும் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின் 3ம் பிரிவின் கீழ் வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகிய நான் வெங்கலச்செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் உத்தியோகத்தர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

இதற்கமைய இக்கூட்டங்களில் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்கள் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர், எது குறைவோ அத்தொகையாகும்.

தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.

இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

| தொ இல | கிளையின் பெயர் | கிளை இல | தவிசாளர் பெயர் | திகதி | நேரம் | கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ள இடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | செட்டிகுளம் | 1 | திருமதி.ஏ.சர்மிளா | 20.12.2025 | மு.ப.10.00மணி | செட்டிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம், செட்டிக்குளம் |
| 2 | முகத்தான்குளம் | 2 | திருமதி.த.செல்வகேதினி | 20.12.2025 | மு.ப.10.00மணி | முகத்தான்குளம் அ.த.க.பாடசாலை, முகத்தான்குளம் |
| 3 | முதலியார்குளம் | 3 | திரு.சி.சிவராஜா | 20.12.2025 | மு.ப.10.00மணி | முதலியார்குளம் றோ.க.த.க.பாடசாலை, முதலியார்குளம் |
| 4 | அடப்பங்குளம்/நேரியகுளம் | 4 | திரு.அ.பிரணவன் | 20.12.2025 | மு.ப.10.00மணி | துட்டுவாகை வீரமாணிக்கம் திருமகள் வித்தியாலயம், அடப்பங்குளம் |
| 5 | சின்னசிப்பிக்குளம் | 5 | ஜனாப்.க.மு.மு.பக்ஹீன் | 20.12.2025 | மு.ப.10.00மணி | தாருஹூலும் முஸ்லீம் வித்தியாலயம், சின்னசிப்பிக்குளம் |
| 6 | வீரபுரம் | 6 | திரு.சி.சிவாகரன் | 20.12.2025 | மு.ப.10.00மணி | வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயம், வீரபுரம் |
| 7 | வாரிக்குட்டியூர் | 7 | திரு.C.N.K.அந்தோனி | 20.12.2025 | மு.ப.10.00மணி | கணேஸ்வரா மகா வித்தியாலயம், வாரிக்குட்டியூர் |
| 8 | பெரியதம்பனை | 8 | திரு.க.உமைநேசன் | 20.12.2025 | மு.ப.10.00மணி | பெரியதம்பனை அ.த.க.பாடசாலை, பெரியதம்பனை |
| 9 | ஆண்டியாபுளியங்குளம் | 9 | ஜனாப்.ச.நிசார் | 20.12.2025 | மு.ப.10.00மணி | ஆண்டியாபுளியங்குளம் முஸ்லீம் வித்தியாலயம், ஆண்டியாபுளியங்குளம் |
| 10 | பாவற்குளம் யுனிற் 02 | 10 | ஜனாப்.அ.மு.மு.ஜிப்ரி | 20.12.2025 | மு.ப.10.00மணி | அல்அமீன் முஸ்லீம் வித்தியாலயம், பாவற்குளம், பாவற்குளம் யுனிற் 02 |
| 11 | சூடுவெந்தபுலவு | 11 | திரு.சு.ரஜிந்தன் | 20.12.2025 | மு.ப.10.00மணி | நிசாத் பதியுதீன் முஸ்லீம் வித்தியாலயம், சூடுவெந்தபுலவு, |
| 12 | மெனிக்பாம் | 12 | திருமதி.பி.சங்கீதா | 20.12.2025 | மு.ப.10.00மணி | அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம், மெனிக்பாம், |

மேற்படி கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்கு உபவிதிக்கு அமைய சமூகமளிக்க தகைமையுள்ள அங்கத்தவர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏதேனும் காரணத்தினால் அழைப்பு கடிதம் கிடைக்கப்பெறாத கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க தகைமையுள்ள அங்கத்தவர்களினை மேற்படி கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற் கலந்து கொண்டு கிளைக்குழுத் தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பா.ஸ்ரீகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
வவுனியா

18.12.2025

(CR/46717) J-1

# இறந்தவரின் வங்கி அட்டையை ஆட்டையைப் போட்டவர் கைது!



கொழும்பு,டிசெ.18

சீரற்ற காலநிலை காரணமாக உடுதும் பர, கங்கொட பகுதியில் வீடு இடிந்து விழுந்ததில் இறந்த ஒருவரின் வங்கி அட்டையைத் திருடி சுமார் ரூ.6000 மதிப்புள்ள பொருள்களை கொள்வனவு செய்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் பணியாற்றும் காவலாளியாவார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக சிற்றூண்டிச்சாலையினை வாடகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்த விலைமனுக்கோரல் 15.01.2026 தொடக்கம் 14.01.2027 வரை


வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி. பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர். தகுதியான / தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களிடமிருந்து 15.01.2026 தொடக்கம் 14.01.2027 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளை கோருகின்றார்.

1. ஹென்ஸ்மன் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு வழங்குதல்.
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் கிடைக்கும் **"கேள்விகோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்"** என்ற படிவத்தைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500.00 ஐ காசாக வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி சாவகச்சேரியில் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 18.12.2025 தொடக்கம் 30.12.2025 வரையான காலப்பகுதியில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரப் படிவங்களை மூலப்பிரதி மற்றும் இணைப்பிரதிகளினை இரண்டு கடித உறைகளில் இட்டு தபாலுறையில் முத்திரையிட்டு "சிற்றுண்டிச்சாலைக்கான கேள்விப் பத்திரம் கோரல்" எனத் தலைப்பிட்டு. 'தலைவர். பிராந்திய பெறுகைக்குழு. வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி ஹென்ஸ்மன் வீதி சாவகச்சேரி. எனும் முகவரியிட்டு. தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 31.12.2025 மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். 31.12.2025 மு.ப 10.00 மணிக்கு பின்னர் உடனடியாகவே கேள்விகள் திறக்கப்படும்.
4. விண்ணப்பப் படிவங்களைப் பெற வரும் போது தங்களால் நடத்துகின்ற உணவகத்துக்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதியையும். குறித்த உள்ளூராட்சி அதிகார சபையால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப் பத்திரத்தின் பிரதியையும் மற்றும் சுகாதாரப் பகுதியால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" அல்லது "C" தரச் சான்றிதழின் பிரதியையே அல்லது அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது சமாதான நீதவான் ஒருவரிடமிருந்து உணவகம் நடத்துகின்ற விவரங்களை உறுதிப்படுத்தி கொண்டுவரல் வேண்டும்.
5. சமைத்த உணவுகள் உரிய அளவுகளில் உள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனையின் மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
6. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் கேள்வி பத்திரங்களையும் 0212270786 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக அலுவலக நேரங்களில் தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவிற்கு முழு அதிகாரமுள்ளது.
8. மேற்படி வலயக்கல்வி அலுவலக சிற்றுண்டிசாலை உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வலயக்கல்வி அலுவலகத்தினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையை வழங்க வேண்டும்.

**கி.கமலராஜன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**வலயக்கல்வி அலுவலகம்**
**தென்மராட்சி**

(CR 46720) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உலக தொழில் முயற்சியாளர் வாரத்தினை முன்னிட்டு வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 23 தொழில் முயற்சியாளர்களுக்கு மூலிகைச் சவர்க்காரம், வீடு சுத்தப்படுத்தும் திரவம், வாசனைத்திரவியம் மற்றும் அத்தர் போன்றவற்றைத் தயாரிக்கும் பயிற்சிநெறி அல்லைப்பிட்டியில் அண்மையில் இடம்பெற்றது.

விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் அமைச்சின் அனுசரணையுடன் வேலணைப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் இந்தப் பயிற்சிநெறி நடத்தப்பட்டது. (ச-41-9)




மன்னார் எமில் நகர் கிராமத்தைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு நிவாரணப்பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் எரிக் பெரேராவின் வழிகாட்டுதலில் உலருணவுப்பொருள்களும், ஆடைகள், காலணிகள், பாடசாலைக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ச-41-56)



சாவகச்சேரி மகிழங்கேணி மற்றும் மீசாலை மதுவன் சனசமூக நிலையப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. புலம்பெயர் நாட்டின் நலன்விரும்பியொருவரின் நிதியுதவி யில் சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் க. தர்சனால் உலருணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-41-9)



ஜனாதிபதி செயலகத்தின் அனுசரணையில் யாழ்.மாவட்டச் செயலகமும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகமும் இணைந்து எழுவை தீவில் நடமாடும் சேவையை நடத்தின. இதில் பிரதேச மக்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர். (க-17)



## வயலில் தேங்கிய வெள்ளம் விவசாயிகளால் அகற்றம்!

யாழ்ப்பாணம்,டிசெ.18

இந்த வாரம் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையால் வயல்களில் தேங்கியுள்ள வெள்ளத்தை விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வெளியேற்றி வருகின்றனர்.

குப்பிழான் பகுதி வயல்களில் அதிகளவு வெள்ளம் தேங்கியிருப்பதால், பயிரழிவைத் தடுக்க, விவசாயிகள் வெள்ளத்தை அகற்றி வருகின்றனர்.

கடந்த 20 தினங்களுக்குள் மட்டும், நான்கு தடவைகள் பெரும் சிரமத்தின் மத்தியில் வெள்ளத்தை வெளியேற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-66)



## ‘நஞ்சாகும் நிலம்’ நூலுக்கு சிறந்த சூழலியல் விருது

கிளிநொச்சி,டிசெ.18

ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வன் எழுதி வெளியிட்ட ‘நஞ்சாகும் நிலம்’ நூலுக்கு, சிறந்த சூழலியல் நூலுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் வடக்குப் பண்பாட்டுப் பெரு விழாவில், பல்வேறு துறைகளில் நூல்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த வருடம் முல்லைத்தீவில் இடம்பெற்ற நிகழ்வில் கவிதை ,சிறுகதை, ஆய்வு, சூழலியல், எனப் பல துறைகளில் வடக்கு மாகாணத்தில் வெளிவந்த நூல்களில் சிறந்த நூல்கள் தெரிவுசெய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில் ‘நஞ்சாகும் நிலம்’ நூலுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த நூலில் மிக மோசமான பாதிப்புகளை எதிர் கொண்டு வரும் நமது சுற்றுச் சூழல் மற்றும் அவற்றைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளிட்ட விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. (க-214)


## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 09 . 1954



உதிர்வு 16 . 12 . 2025

**விஜயகுமாரி தங்கராஜா**

**(ஆயுர்வேத வைத்தியர்)**

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், இல 55, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகுமாரி தங்கராஜா அவர்கள் கடந்த (16.12.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - அன்னமணி தம்பதியரின் அன்பு மகளும், தங்கராஜா (வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும், வைஷ்ணவி (வைத்தியர்) அவர்களின் அன்பு தாயாரும், திலகபிரவின் (வைத்தியர்) அவர்களின் அன்பு மாமியாரும், கிருஷ்ணகுமாரி (இந்தியா), இந்திராணி (இந்தியா), வசந்தராணி (வவுனியா), வரதராஜா (யாழ்ப்பாணம்), கிருஷ்ணகுமார் (ஜேர்மன்), இன்பராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருச்செல்வம் மங்களம் தம்பதியரின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 55, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**தகவல்:**
மகள் - 075 718 0645
மருமகன் - 076 544 2341

(CS/60212) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 10 . 1959



மறைவு
16 . 12 . 2025

### நற்குணசிங்கம் ஜெயலட்சுமி

காலஞ்சென்றவர்களான நாராயணன் - சிவபாக்கியம் (புத்தர்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நற்குணசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அமுதலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், சுயாந்தன், சுதர்சனா ஆகியோரின் தாயாரும், சந்தானகிருஸ்ணன், சுகந்தினி ஆகியோரின் மாமியும், சுயாந்தினியின் பேர்த்தியும், சந்திரன், பருவதம், சொர்ணம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற ராணி, நடராசா, ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராமசாமி, சந்திரகாந்தன், இராஸ்குமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


மஸ்கன் வீதி, 15ம் வீட்டுத்திட்டம்
நிலாவரை, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 024 0410

(CS 30907) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 09 . 1958



மறைவு
16 . 12 . 2025

### சுப்பிரமணியம் சண்முகேஸ்வரன் (வவா)

இணுவில் மேற்கு, சிந்துஜன் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகேஸ்வரன் (வவா) அவர்கள் கடந்த 16.12.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சுந்தரேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுசீலாதேவியின் அன்புக் கணவரும், நிதர்சன் (பிரான்ஸ்), நிதுர்சன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கிருபாமூர்த்தியின் அன்புத் தம்பியும், இராஜேஸ்வரி, ரேணுகேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன் மற்றும் கோமளேஸ்வரி, வெங்கடேஸ்வரன், கணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குகானந்தன், முத்துராசா, பிலேந்திரன், பாமினி, வேதிகா, நளாயினிதேவி (வசந்தா) - அருளானந்தம் (பிரான்ஸ்), உருத்திரசிகாமணி (மோகன்) - அமுதா (பிரான்ஸ்), பிரபாகரன் (யோகன்) - விஜயகலா (பிரான்ஸ்), ரஞ்சனா தேவி - செல்வராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுந்தரிஷி - சயந்த், பிரியந்தி - லோஷனன், சிவாத்மிகா, சுபாகி, நிகிதா, ஹரிணி ஆகியோரின் பாசமிகு மாமனும், இந்துஜன், சுந்தரேஸ், ஸ்ரீராம், வைஷ்ணவி, ஸ்வாஹா ஆகியோரின் பெரியப்பாவும், அனுஷா - ஜெயதரன் (லண்டன்), நிஷாளினி - காசிநாதன், நிறோஜினி - பிரதீப் (லண்டன்), நிரோஷன் (பிரான்ஸ்), அபிஷாந் (பிரான்ஸ்), லக்ஷினி - ஆர்த்தீகன், மஹிஷா, தனுஷா, அபிலாஷ், அபிராமி, ஆகாஷ், அபிஷேக், ஆரணியா, அபிராம், அஸ்வினி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்குஅவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புதுவளவு, வல்வெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 30905) A

## மரண அறிவித்தல்



தோற்றம்
14.03.1949

மறைவு
15.12.2025

### மனோரஞ்சிதமலர் யேசுராஜன் (பேபி)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதமலர் யேசுராஜன் கடந்த 15.12.2025 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற யேசுராஜனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமச்சந்திரா மற்றும் சந்திரவதனா (கனடா) ஆகியோரின் சகோதரியும், இந்திரமதி (ஓய்வுபெற்ற ஆங்கில விரிவுரையாளர்), மெய்யழகன் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனியும், ஜொவிற்றா மேசி (லண்டன்), ஜஸ்ரின் ஜயந்தன் (கனடா), யூட்ஜீவன் (RDA - Jaffna), ஜெராட் ஜோன்சன் (NSB Jaffna), ஜேம்ஸ் யூலியன் (Visakan Constructions/Ananja Travels), ஜெனிஜெரோம் (JS Micro Credit (Pvt) Ltd மற்றும் Murugan Stores) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபானந்தன் (லண்டன்), ஜெனந்தி (கனடா), ஆரணி (Medical Care Hospital), நிருஷா, தர்ஷா, துலஷா, கௌஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், அஞ்ஞனன், அகல்யன், அஞ்சயன், அனஞ்சா, அஜோஷன், தஷ்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்
077 193 0443
077 963 8342
076 159 6912
076 172 7812


(CS 30795) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் சிறுவர் கழகங்களினை வலுப்படுத்துதல் மற்றும் தலைமைத்துவம் மற்றும் இணைய பாவனை தொடர்பான பயிற்சிச் செயலமர்வு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வளவாளராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.பரணீதரன் கலந்து கொண்டார். (ச-41-9)







வேலணைப் பிரதேச செயலகத்தின் மாதிரிக் கிராமமாகிய ஜே/26 புங்குடுதீவு மகளிர் விவகாரக் குழுவின் தையல் பயிற்சி நிலையத்துக்கு மகளிர் விவகாரம் அமைச்சினால் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான 2 தையல் இயந்திரங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ச-41-9)

'டித்வா' புயலினால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்துக்கு வல்வை 21 நண்பர்களின் ஏற்பாட்டில் 1.1 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.
மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரனின் வழிகாட்டுதலில் கிராம சேவை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புலம்பெயர், உள்ளூர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் அவை வழங்கப்பட்டன. (ச-41-100)



சண்டிலிப்பாய் கோட்டையடியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 85 குடும்பங்களுக்கு அரிசிப்பொதிகள் வழங்கப்பட்டன. அமெரிக்காவில் வசிக்கும் சாய்ராம் குடும்பத்தினர் மற்றும் லண்டனில் வசிக்கும் செல்விராஜ் குடும்பத்தாரின் அனுசரணையில் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-63)



டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடன், கோண்டாவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த திருமதி.நிரஞ்சன் சத்தியதேவி, 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.
பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்காக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இலங்கை வங்கிக் கணக்கில் நிதியை வைப்பிலிட்டு, அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் அண்மையில் நேரில் கையளித்தார். (க-66)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னை மடியில் | இறைவன் அடியில்

02 | 29
04 | 12
1937 | 2024



**அமரர் ஆறுமுகம் சின்னையா சுப்பிரமணியம்**

**(இளைப்பாறிய அரச நிர்வாக அலுவலர் தரம் 1, அகில இலங்கை சமாதான நீதவான்)**

**எங்கள் அன்புத் தந்தையின் முதலாம் ஆண்டுத் திதி நாள் (18-12-2025)**

அப்பா ஆண்டொன்று ஆனது
நீங்கள் ஆண்டவன் பதம் அடைந்து,
என்றும் நீங்கா உங்கள் நினைவலைகளுடன்
நீங்கள் காட்டிய வழியில்
பயணிக்கிறோம் நாங்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

**அன்புடன்: மனைவி, மகன்மார், மகள், மருமகன், மருமகள்மார், பேர்த்திகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தெய்வீகக் கிராம நிகழ்வு

பளை, டிசெ.18
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் நடத்திய தெய்வீகக் கிராம நிகழ்வு ராஜ கணபதி ஆலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலர் திருமதி ஹ. சத்தியஜீவிதாவும், சிறப்பு விருந்தி னர்களாக சமூக மருத்துவ அலுவலர் மருத்துவர் பா.திபேகா, மாவட்ட இந்து கலாசார அலுவலர் திருமதி பா.நிலோஜினி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச-41-9)



சுவிஸ் ஊடக அமையம் மற்றும் யாழ்.ஊடக அமையம் ஆகியன இணைந்து யாழ்.ஊடக அமையத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான பாலசிங்கம் பார்த்தீபனின் மருத்துவச் செலவுக்காக நிதியுதவி வழங்கின. இவர் ஈழநாதம் பத்திரிகையில் 1992ஆம் ஆண்டு முதல் ஊடகவியலாளராகவும், இறுதியுத்த காலப்பகுதிகளில் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41-20)



இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சாரதிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் 30 பேருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப்பொதிகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம நிர்வா கத்தால் சாவகச்சேரி நகராட்சி சபையின் பொன்விழா மண்டபத்தில் குறித்த உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ச-41-66)



# கூட்டுறவு அமைச்சால் வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.18
வடக்கு மாகாண மகளிருக்கான வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு, வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. வடக்கு மாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சால், வவுனியா மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் மற்றும் வவுனியா மாவட்டச் செயலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, உதவித்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கினர். (க)

# மாற்றுவலுவுடைய சிறுவர்களுக்கு உதவி



யாழ்ப்பாணம், டிசெ.18
பருத்தித்துறை நகரசபையினால் மாற்றுவலுவுடைய சிறுவர்கள் மூவருக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவி நகரசபையில் கடந்த திங்கட்கி ழமை வழங்கப்பட்டது. 2025ஆம் ஆண்டுக்கான சபை நிதியில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 3 மாற்றுத்திறனாளிகளுக்கு நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலினால் குறித்த உதவி வழங்கப்பட்டது. (ச-41-100)



காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. முகாமில் 60க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எமது...

யின் அமர்வு தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, 'இடர் வேளையில் உத்தியோகத்தர்கள் மக்களுடன் மக்களாகச் செயற்படவில்லை' என்று சபை உறுப்பினர்களான உஷாந்தன் மற்றும் ரமணன் ஆகியோர் குற்றஞ்சாட்டினார்கள். இதன்போது குறுக்கிட்ட தேசிய மக்கள் சக்தியின் பெண் உறுப்பினர் ஒருவர், மக்களுக்கு சேரவேண்டிய நிதி அவர்களுக்கு முறைப்படி கிடைக்கும் வகையில் நடவடிக்கை இடம்பெறுகின்றது' என்று கூறினார். இதன்போதே, ஊழலிலும், மோசடியிலும், ஏமாற்று வேலைகளிலும் ஈடுபடுவது தேசிய மக்கள் சக்தியினர்தான் என்று பரவலாகக் குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டது.

இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர் ரமணன், 'அநுரவை ஒரு சிங்கம் என்றும், தாங்கள் சிங்கத்தின் பிள்ளைகள் என்றும் இவர்கள் தங்களைத் தாங்கள் நினைக்கின்றனர். உங்களுடைய கட்சியினர்தான் கிராம உத்தியோகத்தர்களிடம் இடர் நிவாரணத்துக்குத் தனியான பெயர் விவரங்களைக் கொடுத்துள்ளனர். அதற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது' என்றார்.

இதையடுத்து உறுப்பினர் உஷாந்தன், 'டித்வா புயலின்போது கட்டுடையில் ஓர் இடைத்தங்கல் முகாம் செயற்படுத்தப்பட்டது. முதல்நாள் நான் அங்கே சென்று அங்குள்ள மக்களுக்கு நுளம்புவலை மற்றும் ஏனைய பொருள்களைக் கொடுத்துவிட்டு வந்தேன். மறுநாள் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதியொருவர் சென்று, 'எல்லோருக்கும் எல்லாம் கிடைத்ததா?' என்று கேட்டுள்ளார். ஏன் இந்த வேலை? ஏன் இவ்வாறு மக்களை ஏமாற்றுகின்றீர்கள்?' என்றார்.

தேசிய மக்கள் சக்தியினரும் பதிலுக்குக் கருத்துக்களைக்கூற சபையில் குழப்பமான நிலை ஏற்பட்டது. பின்னர், கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு சபையைத் தவிசாளர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார். வலி. தென்மேற்கு பிரதேசசபையின் பட்ஜெட் 14 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## நாடாளுமன்றில்...

கைகளுக்காக 500 பில்லியன் ரூபாவை விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, அதற்கு முறைப்படியான ஒப்புதலை வழங்குவதற்காக நாடாளுமன்றம் இன்று கூடவுள்ளது. இது தொடர்பான விவாதம் இன்று நடைபெற்று, நாளை தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்த 5ஆம் திகதிவரவுசெலவுத்திட்டக்கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர், ஜனவரி 6ஆம் திகதியே சபை மீண்டும் கூடும் என அறிவிக்கப்பட்டது. எனினும், பேரிடரை அடுத்து பிரதமரால்விடுக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கு அமையவே அவசர அடிப்படையில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறுகின்றது. (அ-ம-44)

## உணவுத்...

சுந்தரம் சுகிர்தன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

சுற்றுலாவிகளைக் கவரும் விதமாகவும், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குச் சந்தை வாய்ப்பை வழங்கும் வகையிலும் காங்கேசன்துறை கடற்கரையில் உணவுத் திருவிழாவை நடத்தவுள்ளோம். எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை இந்த உணவுத்திருவிழா நடைபெறவுள்ளது. இதன்போது உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படவுள்ளது.

எனவே, இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் கொல்லங்கலட்டியிலுள்ள வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் தமது கோரிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றார். (அ-ம-66)

## எந்தவொரு...

பழையபூங்காவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள உள்ளக அரங்கை, யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயம் அமைந்திருந்த காணியில் தற்போது நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்றிவிட்டு அங்கு அமைக்குமாறும் கோரிக்கை விடப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வு முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது பிரதி முதல்வர் இம்மனுவேல் தயாளன் இந்தப் பிரேரணையை முன்வைத்தார். தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சபை அமர்வில் இருந்து வெளிநடப்புச் செய்த நிலையில், ஏனையவர்களால் இந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்கப்பட்டது.

பழையபூங்காவில் உள்ளக அரங்கு அமைப்பது தொடர்பான விடயம் நீதிமன்றத்தில் உள்ளதால், சட்டத்துக்குக் கட்டுப்பட்டு வெளிநடப்புச் செய்ததாக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கபிலன் சுட்டிக்காட்டினார். எனினும், 'எவ்வித கட்டுமானங்களும் அமைக்கக்கூடாது' என்பதே தீர்மானமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வடக்கில்...

வித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக மழையுடனான காலநிலை நிலவுகின்றது. இதனால், பல குளங்கள் வான்பாயும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும், இன்றுமுதல் மழையுடனான காலநிலை படிப்படியாக நீங்கும். எனினும், கிழக்கு, ஊவா, மத்திய, சப்ரகமுவ, தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு எதிர்வரும் 19ஆம் திகதி வரை மழை நீடிக்கும் வாய்ப்புக் காணப்படுகின்றது.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் நாளை தொடக்கம் குளிரான காலநிலை அதிகரிக்கும். எதிர்வரும் 26ஆம் திகதிவரை இந்தக் காலநிலை தொடரும் - என்றுள்ளது. (அ-ம-66)

## மார்ச்...

றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போதே, மேலதிக நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் வகையில் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-27)

## வேலணைப்...

குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தவிசாளரால் முன்வைக்கப்பட்டது.

விவாதத்தைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில், 12 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, பட்ஜெட்டுக்கு ஆதரவாக 17 வாக்குகளும், எதிராக 5 வாக்குகளும் வழங்கப்பட்டன.

22 உறுப்பினர்களைக் கொண்ட வேலணைப் பிரதேசசபையில் தமிழரசுக் கட்சியின் 8 உறுப்பினர்கள், ஈ.பி.டி.பி.யின் 3 உறுப்பினர்கள், சுயேச்சைக் குழுக்களின் 3 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்மக்கள் கூட்டணியின் 2 உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினர் ஆகிய 17 உறுப்பினர்கள் பட்ஜெட்டுக்கு ஆதரவாகவும், தேசியமக்கள் சக்தியின் 4 உறுப்பினர்களும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினரும் பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களித்தனர். (அ-ம-26-66)

## சுமணரத்ன...

யிருந்தார். இதன்போது, வடக்கில் உள்ள தமிழ் மக்களையும், தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும் என்று கூறியிருந்தார். இதையடுத்து, கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு வழங்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு வருடங்களாகியும் சுமணரத்ன தேரர் கைது செய்யப்படவோ அல்லது நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவோ இல்லை. இந்த வழக்கில், கடந்த திங்கட்கிழமை சுமணரத்ன தேரருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன், வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்தே, அவர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நேற்றுச் சரணடைந்தார். அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் நீதிமன்றம் விடுவித்தது. (அ-ம-இ)

## கட்டணக்...

மல் கழிவுகளை அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க அளவுக்கு மேல் குப்பைகள் தேங்கும் போது, அவற்றை மாநகரசபைக்கு கட்டணம் செலுத்தி அகற்றுகின்ற முறை தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றது. அந்தத் திட்டமே தற்காலிக அடிப்படையில் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பொலிஸில்...

கிராம உத்தியோகத்தர் ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தாக்கியதாகக் கூறப்படும் விடயத்தில், பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்குமாறு நீதிமன்றம் அவருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் இளங்குமரன் நேற்று முன்னிலையாகியுள்ளார். எனினும், இதுவரை பொலிஸாரிடம் அவர் வாக்குமூலம் வழங்கவில்லை. இதையடுத்தே, பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்குமாறு நீதிமன்றத்தால் அவருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## இலங்கையுடன்...

டோங்மிங் தெரிவித்துள்ளார்.

சீனாவில் மூன்றாவது அதிகாரம் படைத்த அதிகாரியாக வாங் டோங்மிங் அறியப்படுகின்றார். இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவருக்கும், பிரதமர் ஹரிணிக்கும் இடையில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று விசேட சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே, 'இலங்கைக்கு அனைத்து வகையிலும் சீனா துணை நிற்கும்' என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், இடரின்போது சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகளுக்குத் தனது நன்றியை பிரதமர் ஹரிணி தெரிவித்தார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவைப் பேணுவது தொடர்பிலும், எதிர்காலத்தில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பிலும் இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினார்கள்.

பிரதமர் ஹரிணி அண்மையில் சீனாவுக்குச் சென்றிருந்த நிலையில், அந்தப் பயணத்தின்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் மீளக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## எழுவைதீவின் களநிலைவரங்கள் அதிகாரிகளால் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,டிசெ.18

டித்வா புயலின் தாக்கத்தை அடுத்து எழுவைதீவு எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் தொடர்பில், யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையிலான குழுவினர், நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று ஆராய்ந்தனர்.

எழுவைதீவு ஆரம்பப் பாடசாலை மற்றும் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்துக்குச் சென்ற குழுவினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களோடு கலந்துரையாடி, பாடசாலைகளின் குறைநிறைகளைக் கேட்டறிந்தனர்.

எழுவைதீவு பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக, குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, அங்குள்ள 5 கிணறுகளையும் பார்வையிட்டு, மீண்டும் மக்களின் பாவனைக்காக அவற்றைப் புனரமைப்பது தொடர்பிலும் ஆராய்ந்தனர். எழுவைதீவில் நடைபெற்று வருகின்ற வீதி அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் நேரடியாகப் பார்வையிட்டனர். (க-27)

# ‘சேர்விஸில்’ உழவியந்திரம்; செஸ் விளையாடும் ஊழியர்கள்

### யாழ்.மாநகரசபை அமர்வில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.18

**கொட்டும் மழையில் கழிவகற்ற உழவியந்திரம் இன்றி அவதியுறும் போது அதனை ‘சேர்விஸ்’ போட அதிகாரிகள் அனுப்பியுள்ளனர். என்று மாநகரசபையின் சுகாதாரக்குழுத் தலைவர் சாருஜன் சுட்டிக்காட்டினார். இதன்போது, ‘ஊழியர்கள் பொழுதுபோக்குக்காக ‘கரம்’, ‘செஸ்’ விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர் என்று சபையில் கூறப்பட்டது.**

யாழ்.மாநகரசபை அமர்வு நேற்று இடம்பெற்றபோதே இந்த விடயம் தொடர்பில் நீண்டநேரம் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதன்போது கருத்துத் தெரிவித்த உறுப்பினர் உதயசிறீ, இங்கு வாகனத் தரிப்பிடத்திலுள்ள கரம் போர்ட், செஸ் உபகரணங்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும். வாகனங்களைப் பராமரிக்க நேரத்தை ஒதுக்கவேண்டும்- என்றார்.

இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர் தர்சானந்,

கழிவகற்றல் ஒழுங்காக இடம்பெறவில்லை. கழிவகற்றலில் குளறுபடி ஏற்படுகின்றது. இவற்றைக் கண்காணிப்பவர்களுக்கு ஏன் மேலதி கொடுப்பனவு வழங்குகிறீர்கள்?- என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதம பொறியிலாளர்,

குறிப்பிட்ட கிலோமீற்றர் அளவிலும் கால எல்லைக்குள்ளும் வாகனங்கள் சேர்விஸ் செய்யவேண்டும். அதனாலேயே அவை அனுப்பப்பட்டன- என்றார்.

இதன்போது மாநகரமுதல்வர்,

ஊழியர்களின் பொழுதுபோக்குக்காக கரம்போட், செஸ்போட் விளையாட அனுமதிக்கமுடியாது. தொழிலாளிகள் விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை கடைப்பிடிக்கவேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் இது தொடர்பில் தனியாக விசேடகூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (ச-26)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
**0777 44 44 07**

CR 46656 A/A

## ‘பேரிடரை எதிர்கொள்ளல்: நல்லூரில் வெள்ளம்’ இடர்கால ஏற்பாடு குறித்த கருத்தமர்வு நிகழ்வு!

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் ‘பேரிடரை எதிர்கொள்ளல் : நல்லூரில் வெள்ளம்’ என்ற தொனிப்பொருளில் கருத்தமர்வு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் தலைவர் திருமதி மைதிலி ரவீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் ‘பருவநிலை மாற்றமும் வெள்ளப்பெருக்கும்’ என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீப ராஜா கருப்பொருளுரை ஆற்றவுள்ளார்.

நிகழ்வில் “மௌனம் கலைதல்” என்ற செயல்விளக்க அரங்கு, குழுநிலைக் கருத்தமர்வு, பொதுமக்கள் பங்கேற்கக் கூடியவகை யில் கருத்தறியும் நிகழ்வு .என்பனவும் இடம்பெறவுள்ளன.

பேரிடரை எதிர்கொள்ளல் என்ற குழுநிலைக் கருத்தமர்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் கணபதி கஜபதி, புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி ஏ. அன்ரனிராஜன், கலாநிதி பிரதீபா விபுலன், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையின் வடக்குக்கான உதவிப் பொது முகாமையாளர் எந்திரி ஏகாம்பரநாதன் ஜெகதீசன், யாழ். மாநகரசபையின் தலைமைப் பொறியியலாளர் எந்திரி இராசையா சுரேஸ்குமார், நீர்ப்பாசனப் பொறியி யலாளர் எந்திரி குணராஜ் சுஜீவன் மற்றும் நல்லூர்ப் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இராமலிங்கம் சிவகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-26)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பலாலி வீதி 100m தூரம்
- பாடசாலை 200m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை
- 18 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 074 029 2338**
**076 990 3039**

(CS 30903) A

## வித்தியாசமான இடர் உதவி

இலங்கையில் ஏற்பட்ட பேரிடரினால் பாதிக்கப்பட்ட வீடுகளில் மின்சாதனங்களை இலவசமாகப் பழுதுபார்த்துக் கொடுக்கும் நடவடிக்கையில் ஒருவர் ஈடுபட்டுள்ளார்.

மாரவில தொழிற்பயிற்சிக் கல்லூரியில் ஆலோசகராகப் பணிபுரிபவரே இந்தச் சேவையை செய்துவருகிறார்.

வெள்ளத்தால் சேதமடைந்த பல்வேறு வகையான மின்சாதனங்களை எந்தச் சேவைக் கட்டணமும் வசூலிக்காமல் அவர் திருத்திக் கொடுக்கிறார். ஏதேனும் குழு அல்லது தன்னார்வ அமைப்பு முன்வந்தால், கிராமம் கிராமமாகச் சென்று மாரவில தொழிற்பயிற்சிக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் மற்றும் பட்டம் பெற்றவர்களின் உதவி யுடன் தனது சேவைகளை வழங்கமுடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org